**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8600

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 14.10.2024

Accepted: 10.12.2024

Published: 01.01.2025

Citation:
Vijayalakshmi, N., and P. Tamilarasi. "Sociobiographical Identities of Diaspora Tamil Women Narrators in Chinalakshmi's Short Stories." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 44–50.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8600

*Corresponding Author:
vijikarthi23511@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Sociobiographical Identities of Diaspora Tamil Women Narrators in Chinalakshmi's Short Stories

**G. Vijayalakshmi**
*Research Scholar, Department of Tamil*
*Ayya Nadar Janaki Ammal College, (Autonomous), Sivakasi*
*https://orcid.org/0000-0001-9425-3812*

**P. Tamilarasi**
*Assistant Professor, Department of Tamil*
*Ayya Nadar Janaki Ammal College, (Autonomous), Sivakasi*

**Abstract**

*Many Tamil people in Singapore are contributing to the further growth of Tamil literature. Among them, female writers began to emerge after 1990. The research article aims to examine the current status of women writers in the contemporary literary world, the diaspora community, and how the identities of tamilwomem inform the lives of their narrators in the context of the Singaporean social context.*

***Keywords:*** *Diaspora Literature, Social Environment, Signs, Characters, Modern Literature, Analyst, Hammer, Traditions, Rituals, Coffee Shop, Partners, Internal Politics, Self-reliance Difference.*

**References**

1. Dr. M.S.Srilakshmi, *Singapore Tamil Literature*, Depth and Width, Marutha Publishing House, First Edition August 2005
2. Dr.Anbu Chezhiyan, Diaspora Literatures, World Tamil Association, First edition 2022

# சீனலட்சுமி சிறுகதைகளில் புலம்பெயர் தமிழ் பெண் கதைமாந்தர்களின் சமூக வாழ்வியல் அடையாளங்கள்

***ஞா. விஜயலட்சுமி***
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்)
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, (தன்னாட்சி), சிவகாசி

***முனைவர் பா. தமிழரசி***
உதவிப் பேராசிரியர், (தமிழ்த்துறை)
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

***ஆய்வுச் சுருக்கம்***
*சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் வளர்வதற்கு அங்குள்ள தமிழர்கள் மக்கள் பலரும் பங்களிப்பை அளித்து வருகின்றனர். பெண் எழுத்தாளர்கள் 1990க்கு பின்னர் எழுத தொடங்கியுள்ளனர். நவீன இலக்கிய உலகில் பெண் எழுத்தாளர்களின் எழுத்தியல் நிலை புலம் பெயர்ந்த சமூகத்தில் எங்கனம் அமையப் பெற்றுள்ளது என்பதையும் சிங்கையின் சமூகச் சூழல் நோக்கில் தமிழ் பெண்களின் அடையாளங்கள் எவ்வாறு கதைமாந்தர்களின் வழி வாழ்வியலைச் சொல்கிறது என்பதையும் ஆராயும் நோக்கில் ஆய்வுக் கட்டுரையானது அமைகின்றது.*
***திறவுச்சொற்கள்:*** *புலம்பெயர் இலக்கியம், சமூகச் சூழல், அடையாளங்கள், கதை மாந்தர்கள், நவீன இலக்கியம், சம்மட்டி, ஆய்வாளர், மரபுகள், சடங்குகள், கோப்பிக் கடை, கூட்டாளிகள், உள் அரசியல், தற்சார்பு வேறுபாடு*

நவீனத் தமிழ் இலக்கியத்தில் பல்வேறு விதமான சமூக அவலங்கள் வாழ்வியல் நோக்கில் சிறுகதைகளாக வடிவம் பெறுகின்றன. சிறுகதைகளில் பெண்கள் தங்களுடைய தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு ஒடுக்குமுறைகளையும், அந்த ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபட்டுத் தனித்தன்மையுடன் சமூகத்தில் வாழ்வதனை எடுத்துக்காட்டும் வகையில் படைப்புகள் வெளிவந்துள்ளன. புலம்பெயர்ந்த நாடான சிங்கப்பூரில் தமிழ்ப் பெண்களின் அடையாளப் பரிமாணங்களைப் பிரகடனமில்லாமல் முன் வைக்கின்றன எழுத்தாளர் கனக லதாவின் சிறுகதைகள். அலிசா, நீலமலர், சீனலட்சுமி, போராளி அக்கா, ஆய்வாளர் அனா, அம்மா, ஆத்தா என்று இவர்கள் எல்லோருக்கும் வெவ்வேறு வயது, காலம், சிந்தனைகளால் அலைக்கழிக்கப்படுபவர்கள், அடையாளங்களைத் தேடுபவர்கள், கண்டடைபவர்கள், உருவாக்குபவர்கள், சிதைப்பவர்கள் எனப் பல பரிணாமங்களை கொண்டவர்கள். அப்பெண் கதைமாந்தர்களின் வாழ்வியல் அடையாளங்களை இச்சிறுகதைகளின் வாயிலாக சிங்கப்பூர் சமூகநிலை நோக்கில் இருந்து ஆவணப்படுத்தப்படுகிறது.

### சிங்கப்பூரும் தமிழினமும்

சிங்கப்பூர் நாடு பல வகைகளிலும் முதலாம் உலக நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது. இந்நாடு தனது ஒரே வளமான மனித வளத்தைத் தொடர்ந்து மேம்படுத்துவதில் தன்னிகரற்று

விளங்குகிறது. பல்லினப் பண்பாடும் உலக மயமாக்கத்தின் தாக்கமும் ஆசிய நாடு எனும் தனித்துவமும் கொண்டு விளங்கி வரும் நாடாக இந்நாடு திகழ்கிறது.

சிங்கப்பூரில் தமிழினமும், தமிழ் இலக்கியமும் நாளுக்குநாள் மெருகுகேறிக் கொண்டே வருகிறது. அங்கேயே குடியுரிமை பெற்ற தமிழ் இலக்கிய ஆர்வலர்களும், புலம்பெயர்ந்து வேலை நிமித்தமாக சிங்கைக்கு வந்த தமிழ் குடியேறிகளும் ஒன்றிணைந்து இலக்கியம் படைக்கும் போது அது உலக இலக்கியமாகிறது. புலம் பெயர் மனிதர்களிடம் மன அழுத்தம், இயலாமை, அச்சம், பதற்றம், கையறுநிலைத் தன்மை முதலான சூழ்நிலைகள் நிலவுவது கண்கூடு. அதுவும் புலம்பெயர் தமிழ் சமூகத்தில் பெண்களின் அடையாளம் சற்றே சிக்கலானதொரு நிலை. பரபரப்பான சிங்கை சமூகத்தில் பெண்கள் முனைப்புடனும் ஆளுமையுடனும் திகழ்வதை வெவ்வேறு காலநிலைகளில் பதிவு செய்திருக்கும் சிங்கப்பூர் பெண் படைப்பாளர் கனகலதாவின் படைப்பாக்கதையும், அவரது படைப்புகளில் காட்சிப்படுத்தப்படும் பெண்களின் நிலையையும், சமூக வாழ்வியல் நிலையையும் காணலாம்.

### அலிசா

“அலிசா” என்னும் சிறுகதையில் சிங்கப்பூரின் உபின் தீவில் (தற்போது புலாவ் உபின் என்று அழைக்கப்பெறும்.) மின்சாரம் வருவதற்கு முன்பிருந்த, கால நிலையைச் சித்திரிக்கிறது. இன்று சிங்கையின் சுற்றுலா தலமாக அறியப்படும் உபின் தீவில் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை இக்கதையின் வாயிலாக அறிய முடிகிறது.

இக்கதையில் வரும் தாத்தாவையும், அலிசாவையும் காணும் போது தமிழகத்தின் தொலைக்காட்சித் தொடர் ஒன்றான சிறுவர்களுக்கான சுட்டி டிவி தொடரில் இடம்பெறும் “ஹைடி” கதாபாத்திரம் நினைவுக்கு வருகிறது. இப்போதுள்ள தலைமுறைக்கு இக்கதைகள் தேவையானவை மிகவும் எளிமையானதொரு தீவு வாழ்க்கை, அலிசா தன் அம்மாவைவிட்டுத் தன் பாட்டி தாத்தாவுடன் வசிக்கிறாள். காடுகளில் சீனத்து அக்கம்பக்கத்துச் சிறுவர்களோடு செடிகளில் வெட்டுக்கிளி, சிலந்தி பூச்சிகளைத் தேடிச் செல்வாள். மற்றைய நேரங்களில் தன் பாட்டிக்கு உதவுவதும், தாத்தாவுடன் மீன் பிடிக்க கற்றுகொண்ட வித்தையைச் செயல்படுத்துவதும் அவளது அன்றாடம் அலிசாவுக்கு படிப்பதில் ஆர்வம் இல்லை. பெரிய அளவில் மீன் பிடிக்க வேண்டும் என்பது தான் அவளின் கனவு.

சிங்கப்பூர் அப்போது தான் மெல்ல மெல்ல நகர் மயமாக்கப்பட்ட தருணம். இயற்கையை அழித்தே நகரமயமான அவல வாழ்க்கையை எண்ணி வருந்தினாள் அலிசா, “தாத்தாவின் வீடு இருந்த கம்பத்து நிலத்தை காலி செய்யுமாறு அரசாங்கம் கூறிவிட்டது. வீட்டைக் காலி செய்யும் போது, அரசாங்கம் சிங்கப்பூரில் தான் தாத்தாவுக்கு வீடு கொடுக்கும். அங்கே போனால் மீன் பிடிக்க முடியாதே என்ற நினைப்பு அவளுக்கு பெரும் சோகமாக இருக்கும்.” (சீ.சி. ப.எண்: 20)

இந்த இருபத்து ஒன்றாம் நூற்றாண்டு விஞ்ஞானம், அறிவியல் என பல நிலைகளில் மாற்றம் அடைந்திருந்தாலும் பழமையை மறக்க இயலாது எளிமை வாழ்வை மேற்கொண்ட அலிசா போன்றோருக்கு நகரமயமாதலாலும் அது சார்ந்த நாட்டின் பொருளாதார உயர்வும் சிந்தனையில் இருக்காது. ஏனென்றால் அலிசாவுக்கு பிடித்தமான இச்சூழலைப் பலரும் தம் வாழ்வில் நினைத்து ஏங்கி கொண்டுதான் வாழ்கிறோம்.

**நீலமலர்**

"இளவெய்யில்" என்னும் சிறுகதையானது நவீன சிங்கப்பூரின் வளர்ந்து வரும் மத்திய வர்க்க குடும்பத்தின் பெண் சந்திக்கும் உளச்சிக்கல்களை முன் வைத்து எழுதப்பட்டது. இப்போதுள்ள இளம் தாய்மார்கள் பலருக்கும் குழந்தையை வளர்ப்பது பற்றியப் புரிதல் இல்லாமல் இருக்கிறது. அயலக தேசத்தில் இருவரும் பணிநிமித்தமாக சென்று விட, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வளர்ப்புப் பாதுகாப்பு மையத்திலும், வீடுகளிலும் பணியாள் நியமித்து பார்த்து கொள்ளும் சூழலே இன்றும் நிலவுகிறது.

கூட்டுக் குடும்பங்கள் பிரிந்து தனிக் குடும்பங்களாக மலர்ந்துள்ள அயலக நகரத்து வாழ்வியலில் வேலையோடு தன் குழந்தையை வளர்க்க போராடும் நீலமலர் ஒரு பள்ளி ஆசிரியை. தன் மகன் வியனை தனியே இருந்து பார்த்துக் கொள்ள முடியாத சூழலில் தன் பணி, இதில் எதற்கு முன்னுரிமை கொடுப்பது என்ற சிக்கல்களுடன் பயணிக்கும் அவளது வாழ்வில் திறன்பேசி விளையாட்டுக்களை தனது மன அழுத்தத்திற்கான வடிகாலாக நினைத்து அவள் விளையாடியதன் பயனாக தான் பெற்ற மகனையே சமயத்தில் மறந்து விடுகிறாள். "எனக்கொன்னும் தெரியாதுன்னு நினைக்கறியா? போன வாரம் அப்படிதான் வியன மார்கெட்டுல வண்டியோட வுட்டுட்டு வந்துட்டியாம். நேத்து கோயில்ல வுட்டுட்டு நடந்து வரப்ப உன் புருஷன் பாத்துட்டு கேட்டப்ப ரோட்டுலேயே அழுதியாம்... என்னடி நெனச்சிட்டு இருக்க" (சீ.சி. ப.எண்:40) என்ற வரிகள் தற்போதுள்ள திறன் பேசி மாயத்தில் நிஜ உலகின் நிதர்சனத்தை உணராது, அதற்குள்ளேயே மூழ்கி விடும் தன்மையைக் காணமுடிகிறது. இங்கு நீலமலர் ஒரு பெண்ணாக தன் பிள்ளையைத் தனித்து வளர்க்கப் போராடும் நிலையில் அவளது கணவனது உதவியும் இருப்பதில்லை. நமது இந்தியக் கலாச்சாரத்தில் குழந்தைப் பேற்றின் பெரும்பங்கு பெரும்பாலும் பெண்களின் தலையிலே விழுந்திருக்கிறது. குடும்பத்தின் வருமானச் சூழலை சம அளவில் பங்கிட துடிக்கும் ஆண்மகன்கள் கௌரவம் கருதாது அவளது பேறு கால நிலையிலும், குழந்தை வளர்ப்பிலும் உதவாத நிலையில் தான் இத்தகு சிக்கல்கள் நம் சமூகத்தில் நிலவுகிறது. இதனை வேரறுக்க திறன்பேசி என்பது ஒரு கருவியே அதுவே வாழ்க்கையல்ல என்பதையும் உறவுகளையும், பிரபஞ்சத்தின் உண்மை நிலையையும் புரியும் காலம் வரும்வரை இந்நிலை மாறாது என்று சம்மட்டியால் அடிப்பது போன்று கதை போக்கு அமைகிறது.

**ஆத்தா**

'காவடி' என்னும் சிறுகதையில் வரும் ஆத்தா (பாட்டி) தன் மகள் வயிற்று பேத்தியுடன் வாழ்கிறாள். வயதானால் வரும் முதுமை பருவமும் சில நேரங்களில் குழந்தைக்கு உண்டான ஆசைகளையும், எண்ணங்களையும் உள்மனதில் ஊக்குவிக்கும். சிங்கையில் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஆத்தா தன் பால்யம் முதலே தன் மனதில் குடி கொண்டிருந்த தீராத ஆசையான 'காவடி' சுமப்பதையும், தைப்புச திருநாளையும் மறக்காமல் மனக்கண்ணில் அசைபோட்டு கொண்டிருக்கிறாள்.

வயதாகி நோயுற்ற நேரத்திலும் "தைப்பூசத் திருநாளை" அவள் என்றுமே மறப்பதில்லை. அவளின் எல்லையில்லா ஆனந்தக் களிப்பு அந்த ஒரு நாளில் நிறைவாகி விடும் என்ற நம்பிக்கை ஆத்தாவுக்கு உண்டு. "ஆத்தா உனக்கு ஒன்னுமில்ல. ஆபரேஷனுக்கு ஒத்துக்க நல்ல பிள்ளையில்ல அடுத்த வருஷம் நாம பத்து மலைக்கே போவோம். நா கூட்டிட்டுப் போறேன்." என்ற வரிகள் (சீ.சி. ப.எண்:50) புலம்பெயர்ந்த நாட்டில் தமிழர் முன்னெடுக்கும் சிறந்த விழாவான "தைப்புசம்" தமிழரது அடையாளமாக வேரூன்றி நிற்கக் காரணம் முருகப் பெருமானின் மீது தமிழர்

கொண்டிருக்கும் பக்தியும், சமயப் பற்றும் ஒரு காரணம். ஒரு மதமும் அது சார்ந்த நம்பிக்கைகளும் மூத்த தலைமுறையினரின் எண்ண உளவியலில் என்றுமே நிலை பெற்றிருக்கக் கூடியது. அந்த தீராத ஆசை முதுமையிலும் ஆத்தாவை ஆசை கொள்ள வைக்கிறது.

**ஆய்வாளர்**

'சிலந்தி' என்னும் சிறுகதையில் சிங்கப்பூர் ராணுவம் **1963-65**களில் ஒன்றிணைந்த மலேசியாவுக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையில் பங்கெடுத்த நிகழ்வைக் கூறுகிறது. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வன்மமும் எந்த அளவுக்கும் போகும் என்று பேசுகிறது. சீன ராணுவத்தில் பணிபுரிந்த ஆய்வாளர் பெண் ஒருவர் தன் பால்ய வயதில் தன் நண்பனுடன் (ஜென்னுடன்) ஏற்பட்ட மனக்கசப்பால் அவமானம் அடைகிறாள். அதனை பழிதீர்க்க மனம் போராடிக் கொண்டிருக்க, இந்தோனேசிய ராணுவம் சமயம் பார்த்து ஜென்னை குறி வைத்து தாக்கிய நேரத்தில் தன் தனிப்பட்ட பகைமையை மனதில் வைத்து, அவனை காப்பாற்றத் துணிந்திடாது விட்டு விடுகிறாள்.

"நான்கு திசைகளிலிருந்தும் அவர்கள் பாய்ந்து வந்தனர். அவன் கால்களைத் துளைத்துக் கொண்டு சென்ற குண்டுகள் நீருக்குள் விழுந்தன. அவனது தலைக்கு மேலே இரு பெரிய நீருற்றுகள் எழுந்தன. இரு கால்களும் மடிய, கைகளை சிலந்தியைப் போல விரித்தபடி நீருக்குள் ஜென் சாய்ந்ததை நான் பார்த்தேன்." (சீ.சி. ப.எண்:**64**) என்ற வரிகள் அவனை காப்பாற்றிடாது இனங்காட்டிய தன்மையில் தன் தனிப்பட்ட வஞ்சத்தைப் பழிதீர்க்கும் எண்ணமே ஆய்வாளரின் மனநிலையில் இருந்தது என்பதை கதைப்போக்கு காட்சிப்படுத்துகிறது.

**சீனலட்சுமி**

"சீன லட்சுமியின் வரிசை" என்னும் சிறுகதையில் இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் ஜப்பானியர்களின் கொடுமையினால் சிங்கப்பூரில் சீனக் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அப்போது பல சீனக்குழந்தைகள். குறிப்பாகப் பெண் குழந்தைகள் தமிழர்களால் தத்தெடுக்கப்பட்டனர். இப்போதும் சிங்கப்பூரில் சீன முகத்தோடு சேலை கட்டி பொட்டு வைத்து சுத்தமாகத் தமிழ் பேசும் பெண்களைக் காண முடியும். அப்பெண்கள் மற்ற தமிழர்கள் மறந்துவிட்ட மரபுகள் சடங்குகள் எல்லாவற்றையும் விடாமல் கடைப்பிடிப்பார்கள் எல்லோருக்கும் சொல்லுவார்கள்.

அப்படிப்பட்ட ஒரு பெண் தான் "சீனலட்சுமி" இந்தக்கதை அவர்களின் அடையாளச் சிக்கல்களைத் தொட்டுச் செல்கிறது. தமிழர்கள் அவர்களைச் சீனர்களாகப் பார்ப்பதும், சீனர்கள் அவர்களை இந்தியர்களாகப் பார்ப்பதும், இந்தியாவில் ஆங்கிலோ இந்தியர்கள் இன்றும் எதிர்கொள்ளும் பிரச்சினை போன்றவைதாம்.

பெண்கள் சின்னச் சின்னச் செயல்கள் செய்யும் போதும் அந்த வேலைகளில் வெற்றி பெறும் போதும் தன்னிறைவு அடையக் கூடியவர்கள். வளர்ந்து விட்ட பிள்ளைகள், எப்போதும் கோப்பிக் கடையில் கூட்டாளிகளுடனேயே நேரத்தைச் செலவிடும் கணவர் ஒரு புறம் வீட்டுக்குள் என்ன செய்வது என்று தெரியாமல் கோவிலுக்குப் போகும் சீனலட்சுமி இரண்டு மணி நேரத்திற்கு மேலாக வரிசையில் காத்திருந்து அன்னதானத்தில் சாப்பிடச் சென்றவள். அன்றிலிருந்து வரிசையை விரும்பத் தொடங்குகிறாள்.

பலருக்கும் நேரமில்லாத "வரிசையை" விரும்பாத பரபரப்பு சூழலில் இருக்கும் சிங்கையில் ஓட்டுப் போடுவது கட்டாயமாக்கப்பட்ட நாட்டில் பொதுத் தேர்தலில் ஓட்டுப் போட வரிசையில் நிற்கிறாள். "நகர்ந்து

கொண்டேயிருக்கும் வரிசையில் நிற்பது தான் சீனலட்சுமியைப் பொறுத்தவரை உருப்படியான காரியம். நேராக நிற்கும் வரிசையைவிட வளைந்து வளைந்து செல்லும் வரிசை பிடிக்கும் வளைந்து வளைந்து நகர்ந்தால் கால் வலிக்காது. வரிசை நகர்வதும் தெரியாது என்பது அவளது கண்டுபிடிப்பு" *(சீ.சி. ப.எண்:68)*

"காத்திருப்பு" பலருக்கும் பிடிக்காத ஒரு செயல். ஆனால் சீனலட்சுமிக்கு வரிசையில் நிற்க முடிவெடுக்கும் தருணம் சுவாரசியமானது. பல சமயம் அவளே தனக்குள் எழுந்து பரபரப்பாகும் உணர்வை வேடிக்கை பார்ப்பாள். இக்கதை பலருக்கும் சலிப்பை உண்டாக்கும் காத்திருத்தல் அவளது மனப்போக்கில் அளவற்ற மகிழ்ச்சியைத் தருவதாக இருக்கிறது.

### போராளி அக்கா

"தேக்காவில் ஒரு பாலம் இருந்தது" என்னும் சிறுகதையானது இந்திய தேசிய ராணுவம் பற்றிய ஒரு விமர்சனப் பார்வை அடிப்படையில் உருவான கதைக்களம் சிங்கையில் இருந்து இந்திய தேசிய ராணுவத்தில் சேர வீடு வாசலைத் துறந்து விட்டு இளம் தமிழ்ப் பெண்கள் உணவு கிடைக்கும் என்ற ரீதியில் சேருகிறார்கள். அவர்களுக்குச் சமையலறையில் வேலை கொடுக்கப்படுகிறது. இந்தியப் பெண்கள் உணவு பரிமாறுவதை மற்றவர்கள் விரும்பவில்லை. மாறாக சாப்பிடாமல் செல்கிறார்கள். சிலர் தாங்களே போட்டுக் கொண்டு சாப்பிடுகிறார்கள். தமிழ்ப் பெண்கள் பலர் இத்தீண்டாமை உள்ளரசியலுடன் கடும் மன உளைச்சலை எதிர்கொள்கிறார்கள். மருத்துவப் பிரிவில் வேலை பார்த்தாலும் காயப்பட்டால் மருந்து போடுவதற்கு அப்பெண்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

"ஜப்பான் காரன் வந்த பிறகு அவன் போடும் பேப்பர் மட்டும் தான். வேறெதும் கிடைக்காது. மறுநாள் நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் பாடாங்கில் பேசப் போவதாக மாமா சொல்லியிருந்தார். வெள்ளைக்காரனுடன் சண்டை போட்டு இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கித் தர அவர் பெரிய படை திரட்டுகிறார் என்று சொன்னாராம். இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டால் நாம் இங்கு கஷ்டப்பட வேண்டியதில்லை. எல்லோருக்கும் ஊருக்குத் திரும்பிப் போய்விடலாம் என்றாராம்" *(சீ.சி. ப.எண்:87)* சிங்கையில் புக்கிட் திமா சாலையும் செராங்கூன் சாலையும் இணையும் இடத்தில் அமைந்துள்ளது. தேக்கா பகுதி இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னமே சிங்கையில் குடியிருந்து வரும் தமிழர்கள் அங்கு பலருண்டு. இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்க நேதாஜி திரட்டிய படையில் பெண்கள் பலரும் சேர்ந்து கொள்ள விரும்புகின்றனர். அப்படி சுதந்திரம் கிடைத்தால் தாமும் இந்தியாவின் தமிழகத்தில் வாழ இயலுமே என்று ஆதங்கப்படுகிறார்கள். அக்கால கட்டத்தில் சிங்கப்பூர் தமிழர்களிடம் ஈ.வெ. ரா பெரியாரின் செயல்களில் அதீத ஈடுபாடு உண்டானதை இக்கதை போக்கில் காண முடிகிறது. சுதந்திரத்திற்கு முந்தைய கால கட்டத்தில் தமிழ் பெண்களுக்கு ஏற்பட்ட தீண்டாமை, தற்சார்பு வேறுபாட்டையும், அவர்கள் அதை எதிர்கொண்ட நிலையையும் இப்புலம் பெயர் சமூக நிலை நோக்கில் ஆய்ந்து அறிய உதவுகிறது.

### நிறைவுரை

புலம்பெயர்த் தமிழ் பெண் கதை மாந்தர்களின் சமூக வாழ்வியல் அடையாளங்களைப் பரிணமிக்கும் இப்பெண்கள் யாவரும் தனக்கான கட்டமைப்புச் சூழலில் பொருந்தியும், பொருந்தாமலும் விடை தேட முயல்கிறார்கள். இக்கதைகளில் வலம் வரும் தமிழ்ப் பெண்களின் சமூக நோக்கோடு உண்டான தனிமனித வாழ்வியல் நிலையில் சில இடங்களில் மேம்பட்டு, மெருகேற்றியும், சில இடங்களில் தன்னை

தானே வருத்தியும் உளவியல் நிலையில் சிதைக்கப்பட்டும் அலைகழிக்கப்படுகிறார்கள். இக்கதைகளின் காலநிலை சமூகத்தில் வேறுபட்டு காணப்படினும் தமிழ்ப் பெண்களின் அடையாளங்கள் உரைகல்லாக செப்பனிடப்படுகிறது. அப்பெண்களைப் புரிதல் நிலையில் பார்ப்பது சமூகத்திடம் உள்ளது.

**துணைநூற்பட்டியல்**

1. கனகலதா, சீனலட்சுமி சிறுகதைகள், தமிழினி பதிப்பகம், முதற்பதிப்பு, ஜனவரி 2022.
2. ப. அன்புச் செழியன், புலம்பெயர் இலக்கியங்கள் (ஆய்வுக்கோவை), உலகத் தமிழ்ச் சங்கம், முதற்பதிப்பு 2022. மதுரை.
3. எம்.எஸ். ஸ்ரீலக்ஷ்மி, சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் ஆழமும் அகலமும், மருதா பதிப்பகம், முதற்பதிப்பு ஆகஸ்ட் 2005.